**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 36/2011**

நாள்: 11.08.2026.

பெயர்: சொர்ணம் (வா.சா.2) க/பெ: கலியபெருமாள்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...**

1) எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் எழுதப்படிக்க தெரியாது, கையெழுத்து மட்டும் போடுவேன். என்னிடம் காட்டப்படும் எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் என்ன உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது, என்னிடம் அதனை படித்து காட்டினார்களா என்றால் இல்லை. எனக்கு சர்வே எண் என்றால் என்ன என்று தெரியாது என்றால் சரிதான். வாதி இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்தார் என்றால் இவ்வழக்கு சொத்தில் பங்கு கேட்டு தாக்கல் செய்துள்ளார். வாதி சுப்ரமணியனை எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது மகள் வசந்தாவின் கணவர் என்ற முறையில் எனது மருமகன். நான் திருமணம் செய்துக்கொண்டு மருதூரில் எத்தனை ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்றால் 54 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகிறேன். மருதூருக்கும் தாவா சொத்து அமைந்துள்ள செங்குந்தபுறத்திற்கும் இடையே 16 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். செங்குந்தபுறத்தில் நடப்பவை எனது மருமகன் கூறி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். செங்குந்தபுறத்தில் எனது மருமகன் வீட்டின் அருகில் எனது மருமகனின் பங்காளி, உறவினர்கள் நிரைய நபர்கள் உள்ளனர் என்றால் சரிதான். எனது மருமகன் சுப்ரமணியன் வீட்டிற்கு கீழ்புறம் 1ம் பிரதிவாதி தியாகராஜன் வீடு உள்ளது என்றால் சரிதான், அந்த வீட்டில் தான் தற்போது 9ம் பிரதிவாதி குமார் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். குமாருக்கும், எனது மருமகனுக்கு சண்டை ஏதும் இல்லை என்றால் சரிதான். எனக்கு இவ்வழக்கைப் பற்றி எதும் தெரியாது என்றாலும், எனது மருமகன் அழைத்ததன் பேரில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். ஒப்பம்/க.சொர்ணம்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.